**+2 வணிகவியல்**

**சரியான விடை**

1. (ஆ) டேலர்
2. (ஈ)அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது
3. (அ) நிதிகளை திரட்டுவதற்கு
4. (அ) குறுகிய கால நிதி
5. (இ) காளை
6. (ஆ) மும்பை
7. (ஈ) தொழில் பயிற்சி முறை
8. (ஆ) சமூக வகுப்பு
9. (இ) 15.04.1987
10. (ஈ) அனைத்தும்
11. (ஆ) காசோலை
12. (அ) மனித வளம்
13. (ஈ) அனைத்தும்
14. (ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
15. (அ) தேர்வு
16. (அ) ஏழு
17. (ஆ) 15
18. (அ) i ii iii iv
19. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
20. (அ) மனப்புரட்சி

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. தேர்ந்தெடுத்தல்** காலியிடங்களை நிரப்புவதற்காக மிகப் பொருத்தமான மற்றும் திறமையுள்ள விண்ணப்பதாரர்களை கண்டுபிடித்தல் தேர்ந்தெடுத்தல் ஆகும்.

**22. அதிகாரம்** என்பது ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கிறது.

**23. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் 2 நன்மைகளை குறிப்பிடுக.**

குறியிலக்கு மேலாண்மை உதவியுடன் செயல்திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது.

குறியிலக்கு மேலாண்மை உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாக செய்யப்படுகிறது.

**24. OTCEI சிறு குறிப்பு தருக.** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.

**25. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?**
காளை, கரடி. கலைமான், முடவாத்து

**26. மனிதவள மேலாண்மை** என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல், மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியைச் செய்வதாகும்.

**27. ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை

அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

**28. தகவல் பெறும் உரிமை:-** நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது அப்பொருள் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் விற்பனையாளிரிம் கேட்கும் உரிமை உண்டு.

**29. தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக.** திட்டம் தீட்டல், அமைப்பு பணி, கட்டளையிடுதல், கட்டுபாடு காத்தல், ஒருங்கிணைப்பு

**30.**மத்திய அரசு தனது குறுகியகால நிதித் தேவைகளை நிறைவேற்ற பொது மக்களுக்கும் மற்ற பிற நிதி நிறுவனங்களுக்கும் **கருவூல இரசீதுகளை** வெளியிடுகிறது

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும்?**
அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், கையேடுகள், செய்தி மடல்கள், அறிவுப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்ப்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

**32. இரண்டாம் நிலைச் சந்தை பற்றி சிறு குறிப்பு**
ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**33. பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள்**
பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள், பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள், தனியார் மற்றும் பொதுத் துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வங்கிகள், மாநில அரசுகள், பொது மக்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கிகள்.

**34. செபியின் அமைப்பின் கட்டமைப்புகளை வரைக**



.

**35. வேலை வாய்ப்பு இணையதளங்கள்** என்பது இணையத்தின் வழியாக வேலை தேடுவோர்களையும் வேலை வழங்குநர்களையும் இணைக்கும் ஓர் இணையதளம் ஆகும்.

**36. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.** பன்னாட்டு நிறுவனங்கள் பொருட்களை தயாரிக்க, வாங்க மற்றும் பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது. நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம். வெளிநாட்டு நிறுவனங்களின் வருகை உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியையும் வேலை வாய்ப்பையும் உருவாக்கி வழி கோலலாம்.

**37. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளைக் கூறுக**
மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும். மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம்இடவேண்டும்.பணம் யாருக்கு செலுத்தப்படவேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்

**38. காலம் கடத்தும் பழமைவாத தொழில்முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக.**
பழமைவாத தொழில் முனைவோர்கள் எதையும் புதிதாகப் புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள். குறிப்பாக புதியது புகுத்தினால் இடர் வந்துவிடும் என அச்சம் கொள்பவர்கள். தொழில் சூழ்நிலைகள் மாறிவரும் போதிலும் மாறாத இவர்கள் மாற்றத்தை வேறு வழி இல்லாத நிலையில் ஏற்க தள்ளப்படுகிறார்கள். அதாவது மாற்றத்தை உள்வாங்கவில்லை எனில் தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால் மட்டுமே மாற்றத்தைப் பின்பற்றுவார்கள்.

**39. பங்குகளை முனைமத்தில் வெளியிடல்** நிறுமம் ஒன்று முக மதிப்பிற்கு கூடுதலான ஒரு விலைக்கு அதன் பங்குகளை விற்பதாகும். எ.கா:- ரூ. 10 முக மதிப்பிலான பங்கினை ரூ.12க்கு வெளியிடுதல் முனைமத் தொகை ரூ.2 ஆகும். பங்குகள் மீது பெறப்படும் முனைமத் தொகை ஈடுகள் முனைம கணக்கு என்ற ஒரு கணக்கிற்கு அனுப்பப்படும்.

**40.** பங்குரிமை ஆணை என்பது **ஒரு நிறுமம் வழங்கும் ஆவணம்** ஆகும்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ)நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**

**__வேலைப்பகிர்வு:-__** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**__ஒழுங்குமுறை:-__** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**__கட்டளையொருமை:-__** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**__ஆணையுரிமை வரிசை:-__** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**__ஊதியம்:-__** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**41ஆ)குறியிலக்குமேலாண்மையின்முக்கியநன்மைகள்**
மேலாளர்க்கு அமைப்பில் தங்களது பங்கை புரிந்து கொள்ள உதவுகிறது,
கீழ்நிலை ஊழியர்களும் இலக்கு அமைப்பில் ஈடுபடச் செய்கிறது.
செயல் திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது.
அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
ஒரு தொழிலாளியின் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

**42.அ) பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரிக்க** நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்

**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்

**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு

**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்

**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை

**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை

**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.

**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.

**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)

**உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

**42.ஆ) பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

**43.அ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை ஏதேனும் ஐந்து விளக்குக**

**மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல்:-** ஒரு நிறுவனத்தின் செலவுகளை மேம்படுத்த தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை அடையாளம் காண

**மாற்றங்களை இணைத்துக் கொள்ளல்:-** மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்தமாற்றத்தை நிறுவனத்தில்அறிமுகப்படுத்த மனிதவளமேலாண்மை ஒருமுகவராக செயல்பட வேண்டும்.

**மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல்:-** மனித வள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பாத்துக் கொள்ள வேண்டும்.

**சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல்:-** சரியான வேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனித வள மேலாண்மை உறுதி செய்கிறது. இதனால் குறைந்த தகுதி, மிகைத் தகுதி நீக்கப்படுகிறது.

**திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்:-** பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் இன்று வரை இருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

| **43. ஆ) அடிப்படை** | **ஆட்சேர்ப்பு** | **தேர்ந்தெடுத்தல்** |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

**44.அ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது**

**குடும்பச் சந்தை:-** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

**உள்ளூர் சந்தை:-** ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்போரும் உள்ளூரிலேயே பங்கேற்பது,

**நீண்ட கால சந்தை:-** நீடித்து உழைக்க கூடிய பொருட்களை கையாளும் சந்தையாகும்.

**மிககுறுகியசந்தை:-** மிகக்குறுகியகாலத்தில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மட்டும் கையாளும் சந்தை.

**மொத்த விற்பனை சந்தை:-** உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வது.

**44.ஆ) நவீன சந்தையிடுகையில் ஏதேனும் 2**

**<u>கொரில்லா சந்தையிடுதல்</u>** வரவு, செலவு திட்டத்தில் சந்தையிடுவதற்க்காக, அதிகளவு நிதியை ஒதுக்குவதை விட நேரம், ஆற்றல் மற்றும் கற்பனையின் மூலம் வழக்கத்திற்கு மாறான முறையை கையாண்டு வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்த்து பொருள் அல்லது சேவைப் பற்றிய தகவல்களை அளித்து விற்பனையை பெருக்கும் முறையை கொரில்லா சந்தையிடுதல் என்கிறோம். இது விற்பனையை அதிகரிக்கும்.

**<u>சமூக சந்தையிடுதல்</u>** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தின் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் என்கிறோம்.

**45.அ) நுகர்வோரின் கடமைகள் யாவை?**

**தரமான பொருட்களை வாங்குதல்:-** பொருட்களை வாங்குவதற்கு முன்பு அதனைப் பற்றி முழுமையான விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

**பொருட்களின் எடை அளவு உறுதி செய்தல்:-** பொருட்களின் அளவு, எடை இவற்றை வாங்கும்முன் உறுதி செய்ய வேண்டும்.

**விவர அட்டைகளை படித்தல் :-** பொருட்களின் விவர அட்டைகளை முழுமையாக படிக்க வேண்டும்.

**தவறான விளம்பரம் மீது எச்சரிக்கையாக இருத்தல் :-** விற்பனையாளர்கள் அளிக்கும் தவறான விளம்பரங்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**ரொக்க இரசீதை உறுதி செய்தல்:-** பொருட்களுக்கான இடாப்புடன் ரொக்க இரசீது,

உத்திரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் கடமையாகும்.

**45.ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.**

**நிதி அளிப்பவர்:-** வணிகம் சிறந்த முறையில் இயங்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் கடனீட்டு பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகும்.

**சரக்கு விற்பனையாளர்கள்:-** சரக்கு விற்பனையாளர்களின் முக்கியத்துவத்தை நிறுவனங்கள் உணர்ந்து அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க வேண்டும்.

**சந்தையிடுகைஇடைநிலையர்கள்:-** இவர்கள் நிறுவனத்தையும்,நுகர்வோரையும்இணைக்கும்பாலமாக திகழ்கின்றனர்.

**வாடிக்கையாளர்கள்:-** வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார். வியாபாரத்தின் நோக்கம் அதன் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதாகும்..

**போட்டியாளர்கள்:-** அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**46.அ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக**

**இரு தரப்பினர்:-** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.

**பொருளின் மீதான உரிமை மாற்றம்:-** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தர வேண்டும்.

**சரக்கு:-** அசையும் சொத்துக்கள் அனைத்தும் சரக்கு ஆகும். (எகா:-. பங்குகள், நற்பெயர்)

**விலை:-** பொருளின் விற்பனைக்கான மறுபயனே விலை ஆகும்.

**விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு:-** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடாகும்.

| 46.ஆ) அடிப்படை | தொழில் முனைவோர் | அகத்தொழில் முனைவோர் |
|---|---|---|
| சிந்தனை | தடையற்ற சிந்தனைவாதி | தன்னிச்சையான சிந்தனைவாதி |
| சார்புநிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்தது இருப்பவர் |
| நிதிதிரட்டல் | சொந்தமுயற்சியில் நிதியை திரட்ட வேண்டும் | நிதியை திரட்ட வேண்டிய பொறுப்பு இல்லை |
| வெகுமதி | இலாபத்தில் பங்கு உண்டு | ஊதியம் பெற வாய்ப்பு உண்டு |
| இடர்ஏற்றல் | இடரை கட்டாயம் ஏற்க வேண்டும் | இடரை ஏற்க வேண்டியதில்லை. |

**47.அ) பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி.**

**புதுமை படைக்கும் தொழில் முனைவோர்:-** புதுமை புகுத்திக் கொண்டே இருப்பவர். புதிய தொழில் நுட்பம் மூலம் உற்பத்தியை பெருக்குவது,

**மாதிரியை பின்பற்றும் தொழில்முனைவோர்:-** சந்தையில் கிடைக்கும் பொருட்களை வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.

**காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர்:-** இவர்கள் புதுமை புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள். தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை வந்தால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.

**மந்தமான தொழில் முனைவோர்:-** இவர்கள் தொழிலில் மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.

**47.ஆ) இயக்குனரின் பல்வேறு வகைகளைச் சுருக்கமாக கூறுக.**

**இந்திய குடியுரிமை இயக்குனர்:-** இயக்குனர் கடந்த ஆண்டு காலத்தில் குறைந்தது 182 நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும்.

**பெண் இயக்குனர்:** ஒரு இயக்குனர் குழுவில் குறைந்த பட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

**மாற்று இயக்குனர்:-** ஒரு இயக்குனர் இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால் அவருக்கு பதிலாக நியமிக்கப்படுபவர்.

**கூடுதல் இயக்குனர்:-** ஒரு தனிமனிதனை தேவைப்பட்டால் கூடுதல் இயக்குனராக நியமிக்கலாம்.

**நிழல் இயக்குனர்:-** இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர்.